Registered as a Newspaper
பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 46

வியாழக்கிழமை
11 ஜனவரி 2024

## முச்சந்தி முரளி



"வீட்டுப் பிரச்சினையே தீர்க்கமுடியாதவைதான் நாட்டுப்பிரச்சினையைத் தீர்க்கப்போயினமாம்"

தமிழரசுக் கட்சித் தலைவர் தெரிவு

# தேர்தலா? இணக்கமா? இன்றுவரை அவகாசம்!



**யாழ்ப்பாணம், ஜனவரி 11**

**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கு மும்முனைப் போட்டி ஏற்பட்டுள்ள நிலையில், இணக்கப்பாடு ஊடாக போட்டியற்ற தலைவர் தெரிவுக்காக ஒருநாள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. தலைவர் பதவிக்குப் போட்டியிடுபவர்களிடையே இணக்கப்பாடு ஏற்படாதபட்சத்தில் திட்டமிட்டவாறு எதிர்வரும் 21ஆம் திகதி வாக்கெடுப்பின் மூலம் தலைவர் தேர்ந்தெடுக்கப்படவுள்ளார். அதேநேரம் திட்டமிட்டவாறு கட்சியின் தேசிய மாநாடு எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

☞ 11

## வாள்வெட்டில் சாரதி காயம்!

வடராட்சி, ஜன.11
பருத்தித்துறை நகர் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட வாள் வெட்டுத் தாக்குதலில் பஸ்சாரதி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

☞ 11



## கஞ்சா மீட்பு!

யாழ்ப்பாணம், ஜன.11
உரும்பிராயில் உள்ள வீடொன்றில் முச்சக்கர வண்டிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 75 கிலோ கேரளக் கஞ்சா நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.
விசேட அதிரடிப் படையினரும், இராணு

☞ 11

## அரசின் தவறான கொள்கையே ஆயுதப்போருக்குக் காரணம்!

### தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஜன.11
அரசாங்கங்களின் தவறான கொள்கை காரணமாகவே வடக்கு இளைஞர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்று தேசிய மக்கள் சக்தியின்

☞ 11

## வர்த்தக நிலையம் தீயில் எரிந்து நாசம்

முல்லைத்தீவு, ஜன.11
முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தண்ணீரூற்றில் வர்த்தக நிலையம் ஒன்று தீயில் எரிந்து நாசமாகியுள்ளது. இலத்திரனியல் பொருள்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையமே

☞ 11

## விரைவில் முடிவு

யாழ்ப்பாணம், ஜன.11
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவி விவகாரம் தொடர்பில் கலந்துபேசித் தீர்மானம் எடுப்போம் என்று தலைவர் பதவிக்குப் போட்டியிடும் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன்,

☞ 11

## சம்பந்தன் தரப்பின் சர்ச்சைக்குத் தீர்வு

யாழ்ப்பாணம், ஜன.11
திருகோணமலை மாவட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளைகளுக்கான அங்கத்தவர் தெரிவு தொடர்பாக ஏற்பட்டிருந்த சர்ச்சைக்கு நேற்று நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் விசேட அரசியல் குழுக் கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது.
நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் பிரதிநிதித்துவம் செய்யும் திருகோணமலை மாவட்டத்தின் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளை அங்கத்தவர்கள்

☞ 11

வேலணை, சாட்டியில்

## 3400 வருடங்களுக்கு முந்தைய மனித எச்சங்கள் கண்டுபிடிப்பு!

யாழ்ப்பாணம், ஜன.11
வேலணை, சாட்டிக் கடற்கரைக்கு அண்மையில் 2023 ஆம் ஆண்டு அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்பு எச்சங்கள் 3 ஆயிரத்து 400 ஆண்டுகள் பழமை வாய்ந்தவை என்று காலக் கணிப்பு மூலம்

☞ 11

## தமிழாராய்ச்சிப் படுகோலை நினைவேந்தல்!



விரிவு பக். - 11

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
14 EDITION
JITF 2024
JANUARY ஜனவரி
19 20 21
10.00 மு.ப - 8.00 பி.ப
Muttraweli Grounds முற்றவெளி மைதானம்
இன்னும் 8 நாட்களில்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION




சுப்பர் மார்க்கெட் மற்றும் விற்பனை நிலையங்களில் பொருட்களை வாங்கி BOC டெபிட் (ATM) அட்டை மூலம் பணம் செலுத்துங்கள்.

- மாதாந்தம் குறைந்தது ரூ.5000/- க்கு பொருட்கள் வாங்கி வெற்றி வாய்ப்பை பெறுங்கள்.
- ஒவ்வொரு மாதமும் புதிய வெற்றியாளருக்கான வாய்ப்பு
- மாதாந்தம் 100 வெற்றியாளர்கள்.
- மேலும் சிறப்பு தள்ளுபடிகளுடன் பல நன்மைகள்.

இச்சலுகை 2024 ஜனவரி 31 வரை மட்டுமே.

BOC CARDS UNSTOPPABLE YOU
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்
WP/GT/5991

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அணிசேராக் கொள்கையை கடைப்பிடிப்பது எதற்கு?

### ஹக்கீம் கேள்வி

கொழும்பு, ஜன. 11

அமெரிக்கா, இஸ்ரேலின் தேவைக்கமைய செங்கடலைப் பாதுகாப்பதற்கு கப்பல் அனுப்புவதாயின் எதற்காக உகண்டாவில் நடைபெறும் அணிசேரா தலைவர்களின் உச்சிமாநாட்டில் ஜனாதிபதி பங்கேற்க வேண்டும்?- இவ்வாறு சபையில் நேற்றுமுன்தினம் கேள்விக்கணைகளைத் தொடுத்தார் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம்.

அணிசேரா நாடுகளின் அரச தலைவர்களின் மாநாட்டில் பங்கேற்பதற்காக எதிர்வரும் 18ஆம் திகதி எமது ஜனாதிபதி உகண்டா செல்கின்றார். அமெரிக்கா, இஸ்ரேலின் தேவைக்கேற்ப ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை ஒடுக்குவதற்கென நாம் கப்பல் அனுப்புவதாயின் எதற்காக அவர் அணிசேரா மாநாட்டுக்குச் செல்லவேண்டும்? என்றும் கேட்டார். (ச-44)

# உணவுக்கோ அல்லாட்டம் செங்கடலில் கப்பலோட்டம்

### அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கு நாடாளுமன்றில் சஜித் கண்டனம்



**கொழும்பு, ஜன. 11**

**நாடு வங்குரோத்து அடைந்து, மக்கள் உணவுக்குத் திண்டாடி வரும் நிலையில் அதற்குத் தீர்வைத் தேடாமல் செங்கடல் பாதுகாப்பு நடவடிக்கைக்கு 250 மில்லியன் ரூபா செலவில் கடற்படைக் கப்பலை அனுப்புவதால் என்ன நன்மை? என்று கேள்வி எழுப்பியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: செங்கடலில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை ஒடுக்கும் நடவடிக்கைக்காக 250 மில்லியன் ரூபா செலவளித்து கடற்படைக் கப்பலொன்றை அனுப்புவதற்கு அரசு தயாராகிவருகின்றது.

நாட்டில் சிறார்களுக்கு 3 வேளையும் உணவு இல்லை. வேலையில்லாத பிரச்சினையும் தலைவிரித்தாடுகின்றது. நாட்டு மக்களுக்கு நிவாரணம் இல்லை.

இவ்வாறிருக்கையில், 250 மில்லியன் ரூபா செலவளித்து ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை ஒடுக்குவதற்கான கூட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைக்கு கப்பல் அனுப்புவதால் எமது நாட்டுக்கு கிடைக்கும் நன்மை என்ன? அடிப்படைப் பிரச்சினையைக் கண்டறியாது மேற்கொள்ளப்படும் இந்த இராஜதந்திர நடவடிக்கையால் நாட்டுக்கு என்ன பயன்? -என்றார். (ச-44)

## தமிழாராய்ச்சி படுகொலை; பல்கலையிலும் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜன. 11

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளை நினைவுகூர்ந்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நேற்று மதியம் யாழ். பல்கலைக்கழக பிரதான தூபியில் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

விரிவுரையாளர் ம. இளம்பிறையன் நினைவுரையை ஆற்றினார். (ஒ-125)

## செங்கடல் பாதுகாப்பு நாட்டின் நன்மைக்கே!

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 11

செங்கடல் ஊடாக இலங்கைக்கு வரும் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்காவிடின் கொழும்பு உள்ளிட்ட இலங்கைத் துறைமுகங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும். அதற்கமையவே சமுத்திரப் பாதுகாப்பு விடயத்தில் பொறுப்பு நிறைவேற்றப்படுகிறது.

- இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஹவுத்தி கிளர்ச்சியாளர்களால் செங்கடலின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் உலக நாடுகள் பொருளாதார நெருக்கடியைச் சந்திப்பதுடன் இலங்கையும் அதன் தாக்கத்தை எதிர்கொள்ளநேரிடும். நாம் கப்பல் போக்குவரத்தின்போது செங்கடலைப் பயன்படுத்தாவிடின் அது எமது பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்தும். அந்தவகையிலேயே கடற்படையின் கப்பலொன்றை அனுப்பும் முடிவு எடுக்கப்பட்டது. இதற்காக மேலதிக செலவு செய்யப்படவில்லை - என்றார். (ச-44)



## சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக போராடியவர் வீட்டில் சோதனை

முல்லைத்தீவு, ஜன. 11

கிளிநொச்சி, பூநகரி - பொன்னாவெளிப் பகுதியில் சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து மக்கள் ஒன்றியத்தின் தலைவரின் வீட்டில் விசேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் இணைந்து தீவிர தேடுதலை முன்னெடுத்துள்ளனர்.

தேடுதலுக்கான காரணங்கள் தெரிவிக்கப்படவில்லையாயினும், தமது போராட்டத்தை மங்கச் செய்வதற்கான மறைமுக மிரட்டலே இது என்று அனைத்து மக்கள் ஒன்றியத்தின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-13)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது



யாழ்ப்பாணம், ஜன. 11

உரும்பிராய் பகுதியில் 80 கிலோ கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே மேற்படி இளைஞர் 80 கிலோ கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளார். (ம-26)

## ரணிலே வேட்பாளர் ஐ.தே.க. தீர்மானம்

கொழும்பு, ஜன. 11

செப்ரெம்பரில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும் எனவும், அந்தத் தேர்தலில் தேசிய வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்க வேண்டும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவக் குழு தீர்மானித்துள்ளது.

ஐ.தே.க.வின் முகாமைத்துவக் குழு, கட்சித் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் கூடியபோதே ரணில் விக்கிரமசிங்கவை தேசிய வேட்பாளராகக் களமிறக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கூட்டணி அமைப்பதற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியை உள்ளடக்கிய வகையில் அரசியல் கூட்டணியை அமைக்கும் பொறுப்பு முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ஒ-44)

### நுணாவில் மேற்கில்

## 24 குடியிருப்புக்கு சிவப்பு அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஜன. 11

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தின் டெங்குக் கட்டுப்பாட்டு தரிசிப்பு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நகரசபை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட நுணாவில் மேற்கு பிரிவில் இடம்பெற்றது.

சுகாதாரப் பிரிவினருடன் பொலிஸார், படையினர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து குடியிருப்புகள், காணிகள், பாடசாலைகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தரிசிப்பு மேற்கொண்டனர்.

இதில் டெங்கு பரவும் சூழலாக 129 இடங்கள் இனங்காணப்பட்டு அவற்றைத் துப்புரவுசெய்ய அறிவுறுத்தப்பட்டது. மேலும் டெங்குக் குடம்பிகள் காணப்பட்ட 46 குடியிருப்புகளுக்கு காலஅவகாசமும் 24 குடும்பங்களுக்கு சிவப்பு அறிவித்தலும் வழங்கப்பட்டது. (ச-9)

## மக்கள் விரும்பும் ஆட்சி வேண்டும்

### பதவி விலகிய விஜயசிறி தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 11

தேர்தல் நடத்தப்பட்டு மக்கள் தாம் விரும்பும் ஆட்சியொன்றை ஏற்படுத்துவதற்கு இடமளிக்கப்படவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி தெரிவித்தார்.

தனது பதவி விலகல் கடிதத்தை சபாநாயகரிடம் கையளித்துவிட்டு நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கட்சியுடன் எனக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. ஒரு தலைவராக மட்டும் அல்ல, தந்தைபோலவே என்னை சஜித் பிரேமதாஸ வழிநடத்தினார். அவர் நடிக்கவில்லை. கட்சியில் எனக்கு அநீதி இழைக்கப்படவில்லை - என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலிகளுடைய காலத்தில் நிலங்களுக்கு பாதுகாப்பு

## ரவிகரன் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, ஜன. 11

**விடுதலைப் புலிகளின் காலத்தில், தமிழர்களுடைய நிலங்களில் இப்போது இருப்பது போன்ற அடக்குமுறைகள் இருக்கவில்லை. தமிழர்களின் நிலங்கள், கடல்கள், வளங்கள் காப்பற்றப்பட்டன என்று வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.**

ரணிலுக்கு எதிராக போராட்டம் நடத்திய காணாமலாக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்தில் பொலிஸார் பலப்பிரயோகம் நடத்தியதைக் கண்டித்து நடத்தப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்டே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ரவிகரன் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியின் வருகைக்கு எதிராக காணாமலாக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்தில் பொலிஸார் அடக்குமுறையைப் பிரயோகித்தமை கண்டிக்கத்தக்கது. காணாமலாக்கப்பட்ட விவகாரம், அத்துமீறிய மீன்பிடி, நில அபகரிப்பு எனதமிழர்களின் பெரும் பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை. இவ்வாறான நிலையில் ஜனாதிபதி என்ற பெயரில் வருகை தந்து ஒளிப்படங்களை எடுத்து காட்சிப்படுத்துவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. விடுதலைப்புலிகளின் காலத்தில் இவ்வாறு அடக்குமுறைகள் இல்லை. அந்தக் காலத்தில் எங்களுடைய நிலங்கள், மதங்கள், கடல்கள் காப்பாற்றப்பட்டன - என்றார். (ம-19)

# ஹெரோய்னுடன் பெண் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ்ப்பாணத்தில் பெண்ணொருவர் 2 கிராம் ஹெரோய்னுடன் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவரை மூன்று நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ம-125)

# மாவா வியாபாரி விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஜன. 11

மாவா வியாபாரி என்று சந்தேகிக்கப்படும் நபரொருவர் மானிப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாயில் உள்ள பாடசாலையொன்றுக்கு அருகில் மாவா விற்பனையில் ஈடுபட்டபோது அந்த நபர் கைதுசெய்யப்பட்டு அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இந்தநிலையிலேயே மீண்டும் போதைப்பொருளுடன் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

(ம-125)

# இன்று மழை!

யாழ்., ஜன. 11

இலங்கைக்குக் கீழாக நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் இன்று மழை கிடைக்கும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் வடகீழ் பருவத்தின் இறுதிச்சுற்று மழை இதனோடு முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் ஜனவரி இறுதி வரை அவ்வப்போது மிதமான மழை கிடைக்கக் கூடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-27)

# நெல்லுக்கு நியாயவிலை

## கிளி. விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜன. 11

நெல்லுக்கு நியாயமான விலையைப் பெற்றுத்தர வேண்டும் என்று கிளிநொச்சி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அறுவடை செய்யப்படும் நெல்லினை தனியார் வாகனங்களில் வருவோர் குறைந்த விலையில் கேட்கின்றனர். பெருந்தொகைப் பணத்தை உர வகைகளுக்கும், கிருமிநாசினிக்கும் செலவிட்ட நிலையில் குறைந்த விலையில் நெல்லைக் கொடுத்தால் தமக்கு இலாபமென்ற ஒன்று இருக்காது. எனவே நியாயமான விலையில் நெல் கொள்வனவு செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கிளிநொச்சி விவசாயிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-9)



# வடமராட்சி கிழக்குப் பகுதியில் இறந்து ஒதுங்கும் கடலாமைகள்

யாழ்ப்பாணம், ஜன. 11

வடமராட்சி கிழக்குக் கடற்கரைப் பகுதியில் அண்மைக்காலமாக கடலாமைகள் இறந்து ஒதுங்குகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்குப் பகுதிகளான நாகர்கோவில், குடாரப்பு உள்ளிட்ட கடற்கரைப் பகுதிகளிலேயே ஆமைகள் இவ்வாறு கரையொதுங்குகின்றன. கடந்த மூன்று வாரங்களில் சுமார் 15 ஆமைகள் இவ்வாறு கரையொதுங்கியுள்ளன என்று மக்கள் மேலும் தெரிவித்தனர். (ம-100)



# புதினம் தெரியுமோ?

நெடுக உள்ளூர் விசயத்தையே கதைச்சுக் கொண்டிருந்தால் அலுப்படிக்கும். அதால இண்டைக்கு கொழும்புப் பக்கம் பட்சி பறக்கப் போகுது. இந்த வருசம் தேர்தல் வருசம் எண்டதால எல்லாக் கட்சிக்காரரும் தங்கட எதிர்க்கன்னையில இருக்கிறவைக்கு வலை போடத் தொடங்கியிருக்கினம். கொஞ்சமாதத்துக்கு முதல் சஜித்தின்ர ஆக்கள் கனபேர் அப்பிடியே ரணிலோட சேர்ந்து யானையில ஏறிச் சவாரி செய்யப்போகினம் எண்டுதான் பரவலாக் கதையடிபட்டது. ஆனால் இப்ப நடக்கிறதோ அதுக்குத் தலைகீழா இருக்குது. சுதந்திரக் கட்சியில இருந்தும், மொட்டில இருந்தும் பிரிஞ்சு போனவையில கனபேர் சஜித்தோட 'ரெலிபோனில' கதைக்க தூது விடுகினமாம். ஏற்கனவே ஒண்டிரண்டு பேர் சஜித்தோட சங்கமமுமாயிட்டினம். தானா வாற சீதேவியை ஏன் தட்டி உதைப்பான் எண்டகணக்கில, எல்லாரையும் கட்சிக்குள்ள எடுத்து, அவைக்கு உடனடியாப் பதவிகளும் ரெலிபோன் கட்சிக்குள்ள குடுபடுகுது.

வெளியில இருந்து பாக்கிறவைக்கு, இப்பிடி எல்லாரும் ரெலிபோன் பக்கம் தாவிக்குதிக்கிறதைப் பாக்கேக்க சஜித் பக்கம் தான் பலப்பா இருக்கிறமாதிரித் தெரியும். ஆனால் இதுக்குப் பின்னாலையும் பெரும் சூட்சுமங்கள் இருக்காம். முக்கியமா பசில் தான் இப்பிடி தன்ர ஆக்களை ரெலிபோனுக்கு போகவைச்சு-சித்து விளையாட்டுக் காட்டுறார் எண்டும் கதையடிபடுகுது. அப்பிடி தன்ர ஆக்களை எதிர்ப்பக்கம் அனுப்பிறதுக்கு பசிலுக்கென்ன பைத்தியமோ எண்டு சிலர் நினைக்கலாம். அங்கதான் இருக்கு பசிலின்ர தந்திரம். ரணில் மொட்டுக்காரர் சிலரை தன்ர பொக்கெற்றுக்க போட்டுக்கொண்டு பசிலுக்கே ஆட்டம் காட்டுறாராம். அதுக்குப் பதிலடியா அரசாங்கத்தின்ர பெரும்பான்மையை இல்லாமல் செய்து, 'ஓட்டமெட்டிக்கா' பார்லிமென்டைக் கலைக்கிறதுக்குத்தான் இப்பிடி தங்கட ஆக்களையே எதிர்ப்பக்கம் பசில் அனுப்பிக் கொண்டிருக்கிறாராம்.

இதில இன்னொரு லாபமும் இருக்கு. எலக்சன் வந்தால் மொட்டுக்கு குடைச்சல் தரப்போறது ஜே.வி.பி.யும், சஜித்தின்ர கட்சியும்தான். அந்தக் கட்சியளுக்குள்ள தங்கட ஆக்களை அனுப்பினால், பிறகு எலக்சன் முடிஞ்சபிறகு அவையைத் தங்கட பக்கம் தாவ வைச்சு, ஆட்சியைப் பிடிக்கிறதும் பசிலின்ர பிளான் எண்டு சொல்லுகினம். ஆனால் பசிலுக்கு காகத்தின்ர மூளை எண்டால், ரணிலுக்கு நரியின்ர மூளை. காகத்தின்ர வடையை எப்பிடித் தட்டிப் பறிக்கிறது எண்டு நரியும் யோசிக்காமல் இருக்குமோ?

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் 2024

## கும்பம்

எடுத்தோம் கவிழ்த்தோம் என்றில்லாது சந்தர்ப்ப சூழ்நிலையை உணர்ந்து சமயோஜித புத்தியுடன் பேசும் நீங்கள் அடங்கி எழுபவர்கள். அமைச்சராக இருந்தாலும் ஆண்டவனாக இருந்தாலும் தவறைத் தட்டிக் கேட்பவர்கள் நீங்கள். உங்கள் ராசிக்கு 7ஆம் வீட்டில் சந்திரன் நிற்கும்போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் உங்களின் தனித்திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். அழகு, இளமை கூடும். திருமணம் தள்ளிப் போனவர்களுக்கு கூடி வரும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். நீண்ட நெடுநாள்களாகத் தள்ளிப்போன விஷயங்கள் முடியும். மனைவிவழி உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். வருட ஆரம்பம் முதல் 30.4.2024 வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டில் நிற்பதால் கடினமாக உழைத்து இலக்கை எட்டிப் பிடிப்பீர்கள். சுபச் செலவுகளும், பயணங்களும் அதிகரிக்கும். எதிர்பார்த்த வகைகளில் பணம் வரும். கிரஹப்பிரவேசம், திருமணம், சீமந்தம் போன்ற அடுத்தடுத்த சுப நிகழ்ச்சிகளால் வீடு களை கட்டும். வெளிநாடு செல்வீர்கள். குழந்தை பாக்கியம் கிடைக்கும். மற்றவர்களின் அறிவுரைகளை முழுமையாக நம்பி அதிரடியான முடிவுகளை எடுக்கவேண்டாம். வீடு, வாகன பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும்.

குருபகவான் 1.5.2024 முதல் வருடம் முடியும் வரை உங்கள் ராசிக்கு 4ஆம் வீட்டில் அமர்கிறார். எனவே மன உளைச்சல், மறைமுக எதிர்ப்பு, வீண் விமர்சனம், மூட்டு வலி, சிறுசிறு அவமானங்கள் வரக்கூடும். எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். தாயாரின் உடல் நிலை பாதிக்கும். வாகனத்தில் செல்லும் போதும், சாலையைக் கடக்கும் போதும் கவனம் தேவை. தாய்வழி உறவினர்களுடன் உரசல்கள் வரும். இந்த வருடம் முழுவதும் உங்கள் ராசிக்கு 2ஆம் வீட்டில் ராகுவும், 8இல் கேதுவும் அமர்வதால் அவசர முடிவுகளை தவிர்க்கப் பாருங்கள். குடும்பத்தில் அவ்வப்போது கூச்சல், குழப்பங்கள் வந்து நீங்கும். படபடப்பு, முன்கோபம், பார்வைக் கோளாறு, தூக்கமின்மை வந்து விலகும். பேச்சில் கடுமையைக் குறைத்து எதிலும் நிதானமாக இருக்கவும். மற்றவர்களைப் பற்றி வீண் விமர்சனங்களைத் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகளின் பொறுப்பில்லாத்தனத்தை நினைத்து வருந்துவீர்கள். அடுக்கடுக்கான செலவுகளை சமாளிக்க முடியாமல் திணறுவீர்கள்.

வருடம் முழுவதும் ஜென்மச் சனி தொடர்வதால் பழைய பிரச்சினைகள் தலை தூக்கும். கணவன் மனைவிக்குள் சின்னச் சின்ன சண்டைகள் வந்து போகும். பெரிதாக்க வேண்டாம். பெரிய பதவியில் இருப்பவர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள். திடீர் பயணங்கள் அதிகரிக்கும்.

**வியாபாரிகளே!** மே, ஜூன் மாதங்களில் கணிசமாக இலாபம் உயரும். நவம்பர், டிசெம்பர் மாதங்களில் இலாபம் ஏற்படும். வாடிக்கையாளர்களைக் கவர சில சலுகைகளை அறிவிப்பீர்கள். அவசரப்பட்டு வார்த்தைகளை விடவேண்டாம்.

**உத்தியோகஸ்தர்களே!** உங்கள் உழைப்புக்கு ஏற்ற அங்கீகாரம் கிடைக்கும். புதிய பதவி தேடி வரும். மே, ஒக்ரோபர், டிசெம்பர் மாதங்களில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். சம்பளம் உயரும். சக ஊழியர்கள் குறை கூறும் அளவுக்கு நடந்து கொள்ளாதீர்கள்.

**இந்த புத்தாண்டு, முதல் முயற்சியில் எதையும் முடிக்க முடியாமல் போனாலும் தொடர்முயற்சியாலும், தன்னம்பிக்கையாலும் சாதிக்க வைக்கும்.**

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் கூடுதல் கவனம் தேவை. ஆரோக்கியத்திலும் அக்கறை அவசியம். உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். செயல்கள் எதிர்பார்த்தபடி நிறைவேறும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். உடல் நலனில் கவனம் தேவை. தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் பணவரவு ஏற்பட வாய்ப்பு உண்டு. சகோதர வகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** தொடங்கும் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். உறவுகளால் செலவுகள் ஏற்படும். ஆதாயம் கிடைக்கும். உறவினர்களால் செலவுகளுக்கு வாய்ப்பு உள்ளது.

**சிம்மம்:** தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழிநடத்துவீர்கள். உங்களை நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

**கன்னி:** புதிய முயற்சிகளை மேற்கொள்ளும்போது உரிய கவனம் தேவை. வழக்கமான பணிகளிலும் எச்சரிக்கை அவசியம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** பொறுமையுடன் செயற் பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம்.. குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபட வேண்டி இருக்கும். வியாபாரம் எதிர்பார்த்தபடியே நடக்கும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்களில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். மறைமுக எதிர்ப்பு நீங்கும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான பிரச்சினை ஒன்றில் வாழ்க்கைத் துணை உங்களுடைய ஆலோசனையைக் கேட்டு வருவார். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**மகரம்:** செயல்கள் அனுகூலமாகும் நல்ல நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். சங்கடங்கள் ஏற்படும்.

**கும்பம்:** மனதில்தன்னம்பிக்கையும்தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆதாயம் கிடைக்கும். லாபம் அதிகரிக்கும்.

**மீனம்:** சோர்வு நிறைந்திருக்கும். புதிய முயற்சிகளை தொடங்கு வது நல்லது. தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன. 11

காங்கேசன்துறை முதலி வளவு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய நிர்வாக சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட திருவாசக முற்றோதல் நிகழ்வு, கடந்த மாதம் 27ஆம் திகதி சனிக்கிழமை மேற்படி ஆலயத்தில் இடம்பெற்றது. (ய)

## அழகுக்கலை நிலையங்கள் சுகாதார அனுமதி அவசியம்

### ஒன்றியத் தலைவர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ். மாவட்டத்தில் அழகுக்கலை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் எதுவும் இன்றி புதிய அழகுக்கலை நிலையங்கள் பரவலாகத் திறக்கப்படுகின்றன என்று யாழ். மாவட்ட அழகுக்கலை நிபுணர்கள் ஒன்றியத்தின் தலைவர் பிரதீபா டினேஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அழகுக்கலை தொழில் என்பது சருமங்கள், தோல் சார்ந்த சுகாதார விடயங்களோடு சம்பந்தப்படுகிறது. அதற்கமைய உள்ளூராட்சி மன்றங்களின் சுகாதாரப் பிரிவினரோடு இணைந்து அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும். புதிதாகத் திறக்கப்படும் அழகுக்கலை நிலையங்களுக்கும் அழகுக்கலை சார்ந்த பயிற்சிநெறிகளை நடத்துவதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-20,125)

## பொன்னாலையில் டெங்கு ஒழிப்புப் பணி

யாழ்ப்பாணம், ஜன. 11

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு பொன்னாலையின் பல பகுதிகளில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை டெங்குத் தடுப்பு விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

பொன்னாலைப் பகுதிக் கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது டெங்கு அபாயமுள்ள வீடுகள் தரிசிக்கப்பட்டு பொதுமக்களுக்கு டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வும் எச்சரிக்கையும் வழங்கப்பட்டது. (ச-66)


## சித்திரத்தேரில் ஆஞ்சநேயர்

யாழ்ப்பாணம், ஜன. 11

இணுவில், மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய அனுமர் ஜெயந்தி இலட்சார்ச்சனைப் பெருவிழாவின் தேர்ப் பவனி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பெருமளவு அடியவர்கள் சூழ இடம்பெற்றது.

வசந்தமண்டபப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆஞ்சநேயப் பெருமான் திருநடனத்துடன் சித்திரத் தேரில் எழுந்தருளினார்.

நூற்றுக்கணக்கான அடியவர்கள் சூழ சித்திரத் தேர் பவனி இடம்பெற்றது. (ச-66,27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குற்றங்களுக்கான வக்காலத்து

'காணி நிலம் வேண்டும் பராசக்தி' என்று கனவுகண்ட பாரதி, இன்று யாழ்ப்பாணத்தில் இருந்திருந்தால் 'நல்ல காணி உறுதியுடன் காணிநிலம் வேண்டும்' என்றுதான் பாடியிருப்பார். அந்தளவுக்கு உறுதியில் கூட மோசடி. செய்து காணிகள் பரவலாக விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒருவரின் பெயரில் உள்ள காணிகளை இன்னொருவரின் பெயருக்கு மோசடியான முறையில் மாற்றி பின்னர் அதனை அப்பாவிகளின் தலையில்கட்டிவிட்டு தலைமறைவாதல், வெளிநாடுகளில் உள்ளோரின் காணிகளுக்கு கள்ள உறுதி செய்து விற்பனை செய்தல், அரச காணிகளை தனியார் காணிகள்போல காட்டி அதற்கும் உறுதி தயாரித்து விற்றல், வெள்ளம் கடல்போல தேங்கக்கூடிய பகுதிகளையெல்லாம் ஒப்பனை செய்து நல்லகாணி என ஏமாற்றுதல் என்றெல்லாம் காணி மோசடிகளின் வகைகள் நீண்டு கொண்டே செல்கின்றன. இந்த மோசடிகளில் சிக்கி, கோடிக்கணக்கில் பலர் தங்கள் பணத்தைத் தொலைத்திருக்கிறார்கள். காணி மோசடிகள் குறித்து விசாரணை செய்வதற்கென விசேட பொலிஸ் குழுக்கள் அமைக்கப்படுமளவுக்கு, நாளொரு காணியும் பொழுதொரு மோசடியுமாக இந்த நிலைமை தொடர்கின்றது.

இவ்வாறான காணிமோசடிகளில் தனிநபரோ அல்லது நிறுவனமோ மாத்திரம் சம்பந்தப்படுவதில்லை. இந்தமோசடிக் குழு மிகப் பரவலான, நுண்ணிய கண்ணிகளால் பின்னப்பட்ட வலைப்பின்னலைக் கொண்டது. குறிப்பாக கள்ள உறுதி தயாரித்தல், வெற்றுக் காணிகளை இனங்காணல், கையழுத்தைப் போலியாகப் போடுதல், தனியாரின் காணிகளோடு அருகில் இருக்கும் அரசகாணியையும் சேர்த்து உறுதிக்குள் உள்ளடக்குதல் என்று மிகமுக்கியமான பங்களிப்பை இந்த மோசடியில் செய்வது நொத்தாரிஸுகள்தான். அதுவும் நொத்தாரிஸுப் பணியைச் செய்யும் சில குறிப்பிட்ட சட்டத்தரணிகளே இந்தக் காணிமோசடிகளின் மூளைகளாகவும் தொழிற்படுகின்றனர். சட்டத்தின் ஓட்டைகள் எவையெனக் கண்டறிந்து, அதற்கேற்ற வகையில் இலகுவில் எவராலும் இனங்காணவோ, வழக்குத்தொடுக்கவோ முடியாத ஏற்பாடுகளை உறுதியில் உள்ளடக்குவதில் இந்தச் சட்டத்தரணிகள் கில்லாடிகள். பல வழக்குகளில் சட்டத்தரணிகள் மீதுதான் முதன்மையான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. சில சட்டத்தரணிகள் காணிமோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இன்னும் சிலரோ தாம் கைதாவதில் இருந்து தப்பிக்க முன்பிணையெடுத்து தப்பிக்க முயல்கின்றனர்.

இத்தகையதொரு சூழமைவில்தான், யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம், சட்டத்தரணிகள் எதிர்நோக்கும் சில விடயங்களை முறையிட்டிருக்கிறது சட்டத்தரணிகள் குழுவொன்று. அவ்வாறு முறையிடப்பட்ட விடயங்களுள், காணிமோசடி தொடர்பில் உறுதிகள் தொடர்பான போதிய அறிவின்மை காரணமாகப் பொலிஸார் தவறான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். சட்டத்தரணிகளைக் கண்ணியமற்ற, அவகாசம் எதுவுமற்ற வகையிலே பொலிஸார் கைது செய்கின்றனர்' என்பதுவும் முக்கியமானது. எத்தனையோ பிரச்சினைகள் நாட்டில்இருக்க, இந்தச் சட்டத்தரணிகள்குழு, ஒரு மோசடிக்கும்பலுக்கு வக்காலத்து வாங்கும் கோரிக்கையை ஜனாதிபதியிடம் முன்வைப்பதென்பது எவ்வளவு அபத்தமானது.

காணிமோசடி என்பது இயல்பாக நடக்கும் விடயமல்ல. இதுவொரு திட்டமிட்ட குற்றச்செயல். அந்தக் குற்றங்களில் ஈடுபடாமல் தங்கள் கைகளை சட்டத்தரணிகள் சுத்தமாக வைத்திருந்தால், ஏன் பொலிஸார் அவகாசம் இல்லாமல் கைதுசெய்யப் போகின்றனர்? ஏன் கண்ணியமில்லாமல் நடக்கப் போகின்றனர்? அவகாசம் கொடுத்தால், சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி மோசடிகளை அவர்கள் திசைதிருப்பவும் கூடும் என்பதாலேயே பொலிஸார், மின்னாமல் முழங்காமல் திடீரென இத்தகைய மோசடிச் சட்டத்தரணிகளைக் கைதுசெய்கின்றனர். சட்டத்தரணிகள் தவறு, மோசடிகளைச் செய்யாமல் கண்காணித்தாலேயே, அவர்களின் கண்ணியமும், மேன்மையும் குன்றாமல் இருக்கும். அதைவிடுத்து, மோசடிக்காரர்களுக்காக ஜனாதிபதியிடம் சென்று முறையிடுவதெல்லாம் நீதியான காரியமல்ல. மோசடியில் ஈடுபடுவது மாத்திரம் குற்றமல்ல, அதற்குத் துணையாக, அரணாக நிற்பதும் குற்றமே.




# பொருளாதாரத்தை மீட்க மத ஒற்றுமை அவசியம்!

## வடக்கு ஆளுநர் வலியுறுத்து



**யாழ்ப்பாணம், ஜன. 11**

**பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப மதங்களுக்கிடையிலான ஒற்றுமை அவசியம். மதநல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான பணிகளுக்கு உறுதுணை வழங்குவேன் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண ஆளுநரின் ஒதுக்கீட்டின்கீழ் மத வழிபாட்டுத் தலங்களுக்கான அன்பளிப்புகளை கையளிக்கும் நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார். (ச-26-125)

# கொக்காவிலில் சோதனைச் சாவடி

முல்லை. ஜன. 11

கொக்காவிலில் இராணுவம், பொலிஸ் இணைந்து காவலரணை அமைப்பதற்கான முயற்சிகள் நடைபெறுவதாக துணுக்காய் பிரதேச செயலர் ச.லதுமீரா தெரிவித்தார்.

புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி, ஐயன்கன்குளத்திலிருந்து கொக்காவில் வழி ஊடாக தொடர்ச்சியாக மணல், மரங்கள் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுவது தொடர்பாகக்கேட்ட போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ஒ-13)

# உப உணவுப் பயிர்களை சீரழிக்கின்றன குரங்குகள்

முல்லைத்தீவு, ஜன. 11

உப உணவுப் பயிர்ச் செய்கையை குரங்குகள் அழித்து வருவதால் விவசாயிகள் பெரும் இழப்புகளைச் சந்தித்து வருகின்றனர். பெருமளவு குரங்குகள் வருகை தந்து பயிர்களை அழித்து வருவதாகவும் உப உணவுப் பயிர்கள் மட்டுமல்ல தென்னைகளில் ஏறி குரும்பைகளையும் நாசமாக்கி வருவதாகவும் குரங்குகளைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் உதவ வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-13)

# வயல் நிலங்களை விடுவியுங்கள்

கிளிநொச்சி, ஜன. 11

பூநகரி, ஜெயபுரம் கிராம மக்களுக்குரிய வயல் நிலங்களை முழுமையாக விடுவிக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 14 வருடங்களில் 130 ஏக்கர் வரையான நிலப்பரப்பே விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய வயல் நிலம் வனவளத் திணைக்களத்தின் பிடியில் உள்ளது. தற்போது தேவன்குளம் புனரமைக்கப்பட்டு வரும் நிலையில் வயல் நிலக் காணியை முழுமையாக விடுவித்து பயிர்ச்செய்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஜெயபுரம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-13)

# சுகாதார சேவைகள் நிறுத்தம்: நோயாளர்கள் பெரும் அவதி

வவுனியா, ஜன. 11

அரச தாதிய உத்தியோகத்தர்கள் உட்படப் பல்வேறு தொழிற்சங்கங்கள் 48 மணிநேர தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமையால் சுகாதார சேவைகள் நேற்றுத் தேக்கமடைந்தன. மருத்துவ சேவைகளுக்கு வழங்கப்படும் 35 ஆயிரம் ரூபா கொடுப்பனவை ஏனைய சேவைகளுக்கும் வழங்குமாறு கோரி நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பொது மருத்துவமனை உட்பட வடக்கு மாகாணத்தின் அனைத்து மருத்துவமனைகளிலும் பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டதால் மருத்துவமனைக்கு வந்த நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டனர். (ஒ-110)

**நாளை**

12.01.2024

**வெள்ளிக்கிழமை**

**மார்கழி 27**

சுபநேரம் : 06.33 - 08.03

ராகுகாலம் : 11.03 - 12.33

**நாளொரு நல்வார்த்தை**

**குணம், பாங்கு, நடத்தை எல்லாவற்றிலும் உயர்ந்த சிறப்பம்சமானது எளிமையே.**

**- ஹென்றி வாட்ஸ்வொர்த்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH

14th EDITION

**Jaffna International Trade Fair**
**யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை**

JITF 2024

JANUARY ஜனவரி

19 20 21

10.00மு.ப - 8.00பி.ப

Muttraweli Grounds
(Next to Jaffna Fort)

முற்றவெளி மைதானம்
(யாழ் கோட்டைக்கு அருகில்)



VISIT US

Automobile | Construction | Consumer Goods | Apparel
Hospitality | Agriculture | Travel & Tourism | IT | Education
Beverage, Packaging Industry and many more...

PLATINUM SPONSOR · GOLD SPONSORS · MEDIA SPONSORS · ORGANIZED BY · IN ASSOCIATION WITH

DIMO · NIPPON CEMENT · Capital · LECS · CCIY

SILVER SPONSORS

Anchor · Hayleys Solar · Dasky Butter · PHOENIX · Sera

IMALKA : +94 77 1093792 | imalka@saexhibitions.com | www.jitf.lk | jitf.lk

## பெண் உதவியாளர் / பராமரிப்பாளர் தேவை


வயதான பெண்மணியை வீட்டில் தங்கியிருந்து உதவிகள் செய்து பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் தேவை. உணவு மற்றும் தங்குமிடத்துடன் நல்ல ஊதியம் வழங்கப்படும்.

**தொடர்பு:076 220 6863**

(CS 27616) A-1

## உங்கள் பாதக்கமலத்தில் எங்கள் 20 ஆம் ஆண்டு கண்ணீர்ப் பூக்கள்

அன்னை மடியில்
16.07.1943



ஆண்டவன் மடியில்
11.01.2003

### அமரர் சபாபதி நாராயணன்

(ஓய்வுபெற்ற கிராம சேவகரும் சமாதான நீதவானும்)

அப்பா இல்லாத வாழ்க்கையை
வாழ்ந்து பார்க்கும் போதுதான் தெரியும்
அப்பா என்பது வார்த்தை அல்ல
அது வாழ்க்கையின் பாடம் என்று...

பிள்ளையார் கோயிலடி,
வடலியடைப்பு.

(cs 53469 (2N-1)

என்றும் நினைவில்
மனைவி, பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

தோற்றம்
24 . 05 . 1928



மறைவு
09 . 01 . 2024

### பராசக்தி நவரட்ணசிங்கம்

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்- உரும்பிராய் இந்துக் கல்லூரி)

உரும்பிராய் வடக்கை பிறப்பிடமாகவும் வாழ்பதியாகவும் கொண்டிருந்து கொழும்பைத் தற்போதைய வாழ்விடமாகக் கொண்டிருந்த பராசக்தி நவரட்ணசிங்கம் அவர்கள் கடந்த (09.01.2024) செவ்வாய்க்கிழமை காலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரட்ணசிங்கம் (பிரதம எழுதுநர், நீர்பாசனத் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சரசாலை இளையதம்பி உரும் பிராய் காந்திமதி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி கனகரட்ணம், பரமேஸ்வரி, சோமாஸ்கந்தர், விஜயலஷ்மி, சந்திரமௌலீசன், யோகேஸ்வரன், நகுலேஸ்வரி, ஶ்ரீதரன் மற்றும் கங்கமௌலீசன் ஆகியோரது அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கனகரட்ணம், சோமாஸ்கந்தர், நவமணி, பூலோகதிரவியம் மற்றும் திலகாம்பிகை, ஶ்ரீதரன் ஆகியோரின் மைத்துனியும், கௌரீசன் (பிரித்தானியா), லலிகரன் (கொழும்பு) ஆகியோரது அன்புத் தாயாரும், வற்சலா, கலைச்செல்வி ஆகியோரது அன்பு மாமியும், அபிஷா, நேருஷா, நிருஷா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.01.2024) வியாழக்கிழமை காலை 8.00 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு முற்பகல் 10 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, நண்பகல் 12.00 மணிக்கு பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.


**கௌரீஸ் - 4407 957 406 028**
**லலி - 0094 776 341 558**

(cr 41495) (N-1)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு
17 . 04 . 1943



இறப்பு
07 . 01 . 2024

### சரவணமுத்து சிதம்பரப்பிள்ளை

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் கோவிலாக்கண்டி கைதடியை வசிப்பிட மாகவும் கொண்ட சரவணமுத்து சிதம்பரப்பிள்ளை கடந்த (07.01.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து விசாலாட்சி தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான கனகசபை செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இரத்தினேஸ்வரியின் பாசமிகு கணவரும், நடராஜா, றோகிணியம்மா, இராசரத்தினம், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் சங்கரப் பிள்ளை, யோகநாதன், கமலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சரவணபவன், காலஞ்சென்ற சரவணாம்பிகை மற்றும் சரவணபவாயினி, சரவணறாஜினி, சரவணகுணாளன், சரவணறாயிந்தன், ருஷியேந்தினி, நிரோஜினி, துஸ்யந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அனித்தா, காலஞ்சென்ற செகதுணநாதன் மற்றும் ரங்கநாதன், பத்மினி, தனுஷியா, தனராஜ், சுரேஸ்வரன், கயேந்திரன் ஆகியோரின் மாமனாரும், தீபன், அம்பிகா, உமாசங்கர், சுபேதிகா, அபிசாந், அபிசயா, அனுக்சாயினி, அபிஸ்கா, அவனீஷ், அர்ஷித், யேன்ராஜ், கஸ்வின், அக்ஷிதா, கிருசியா, அஸ்விகன், அனுக்சா, அக்ஷியன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.01.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மறவன்புலோ வடக்கு காந்தளம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோவிலாக்கண்டி,
கைதடி.

தொடர்பு: **077 928 0423**
**077 454 2750**

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொங்கல் அகப்பை விற்பனைக்கு

தைப்பொங்கல் வியாபாரத்தை சிறப்பிக்க இன்றே முந்துங்கள்



- அகப்பைகள்
- விளக்குமாறு
- திருவுபலகை
- இருபலகை

வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு

தொடர்பு: 077 210 5286


## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 06 . 1971



மறைவு 10 . 01 . 2024

### பொன்னையா சிறிபவன்

சிறுவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சிறிபவன் நேற்று (10.01.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிறிபோஸ், சிறிகரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுத்திக்கிரியைகள் இன்று (11.01.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியள வில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக் கிரியைக்காக சிறுவிளான் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுவிளான்
இளவாலை.

தகவல்:
குடும்பத்பதினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 10 . 1946



மறைவு 09 . 01 . 2024

### திருமதி
### பாலசிங்கம் மகேஸ்வரி

யாழ்ப்பாணம், கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாலசிங்கம் மகேஸ்வரி கடந்த (09.01.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - கனகம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற இரத்தினம் பாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா (பவளம்), மகாதேவன், சண்முகசுந்தரம், பாலசுப்பிரமணியம், இரத்தினசிங்கம் மற்றும் தவமணி, தங்கராசா ஆகியோரின் பாசமுள்ள சகோதரியும், காலஞ்சென்றவர்களான சந்தானகோபால், விஜயகுமார் மற்றும் சந்திரகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், புஷ்பலீலா, கவிதா, சிவாஜினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மதிராஜ், சண்ராஜ், கபில்ராஜ், துஷிராஜ், சதுர்ஷன், சாரங்கா, தனேஷ் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (14.01.2024) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிராசா வீதி,
கொக்குவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்
சந்திரகுமார் (மகன்)
மதிராஜ் - 077 824 0420

## ஓவியப் போட்டியாளர் கௌரவிப்பு நிகழ்வு!



முல்லைத்தீவு, ஜன.11

சர்வதேச சிறுவர்தின நிகழ்வை முன்னிட்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையால் நடத்தப்பட்ட கருத்தியல் ஓவியப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த வெற்றியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டச் செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. மேலதிக மாவட்டச் செயலர் சி.குணபாலன் தலைமை யில் நடைபெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் பிரதம அதிதியாக பங்கேற்றார்.

(ச-75)


### நாஹா மருத்துவ நிலையம்

பாரிசவாத நோய் தரும் கை, கால் செயலிழப்பு, முழங்கால்பாதிப்பு ஆஸ்மா, தீராதபுண்கள், நீரிழிவு, குழந்தையின்மை சிறப்புமருத்துவம்.

T.P.: 077 321 2740

வங்கி முன்லேன் சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெகபதிவீடு) மானிப்பாய்.

### கடை வாடகைக்கு

கல்வியங்காடு மூன்றாம் கட்டையிலுள்ள கடை வாடகைக்கு விடப்படும்.

077 175 0746


## கேள்வி அறிவித்தல்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி வைத்தியசாலைகளுக்கான உலர் உணவுகள் மற்றும் சமைத்த உணவுகள் வழங்குவதற்கான பெறுகைகள் – 2024/2025

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, ,பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் வைத்தியசாலைகளுக்கான உலர் உணவுகள் மற்றும் சமைத்த உணவுகள் வழங்குவதற்கு இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.
2. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித் தனியாக மேற்கொள்ளப்படும்.
3. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
ஆ. அத்துடன், மூல உணவுகளை வழங்குவதற்கான அனுமதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 – பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை ,கண்டி வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 0212285932/ 0212225719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 09.30 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து **11.01.2024 ம் திகதி முதல் 24.01.2024 ம்** திகதி வரை மு.ப 09.30 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரையான காலப்பகுதியில் கீழ்வரும் அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. **17.01.2024ம்** திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு கேள்வியாளர்களுக்கான பெறுகை நடைமுறை முறைகள் தொடர்பான முன் கூட்டம் **(pre-bid meeting)** எமது அலுவலகத்தில் நடைபெறும். அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் தவறாமல் கலந்துகொள்வது அவசியம்.
8. கேள்விகள் யாவும் **26.01.2023ந்** திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்ககூடியதாக தலைவர் , கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின், கண்டி வீதி, கிளிநொச்சி முகவரியில் நேரடியாக நிதிக்கிளையில் உள்ள பெறுகைப்பெட்டியினுள் இடுதல் வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு பெறுகைக்குமான இலக்கத்தினை தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் 26.01.2024 ந் திகதி முற்பகல் 10.00 மணிக்கு திறக்கப்படும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் **(Bid Security)** ஒவ்வொரு பெறுகைக்கும் தனித் தனியாக செலுத்தப்படல் வேண்டும்.
10. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

| இல | விபரங்கள் | குறியீட்டு இலக்கம் | பெறுகைப் பிணைத் தொகை | பெறுகைப் பிணைத் தொகை செல்லுபடிக் காலம் | மீளளிக்கப்படாத வைப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | பிரதேச வைத்தியசாலை உருத்திரபுரம். | NP/K/RDHS/CF/2024/8 | ரூபா.40,000.00 | 25.04.2024 | ரூபா.2000.00 |
| 02 | பிரதேச வைத்தியசாலை வட்டக்கச்சி | NP/K/RDHS/CF/2024/7 | ரூபா.40,000.00 | 25.04.2024 | ரூபா.2000.00 |
| 03 | பிரதேச வைத்தியசாலை வேரவில். | NP/K/RDHS/CF/2024/6 | ரூபா.40,000.00 | 25.04.2024 | ரூபா.2000.00 |
| 04 | பிரதேச வைத்தியசாலை பளை | NP/K/RDHS/CF/2024/5 | ரூபா.40,000.00 | 25.04.2024 | ரூபா.2000.00 |
| 05 | பிரதேச வைத்தியசாலை அக்கராயன்குளம். | NP/K/RDHS/DF/2024/4 | ரூபா.60,000.00 | 25.04.2024 | ரூபா.2500.00 |
| 06 | பிரதேச வைத்தியசாலை தர்மபுரம் | NP/K/RDHS/DF/2024/3 | ரூபா.60,000.00 | 25.04.2024 | ரூபா.2500.00 |
| 07 | பிரதேச வைத்தியசாலை பூநகரி. | NP/K/RDHS/DF/2024/2 | ரூபா.60,000.00 | 25.04.2024 | ரூபா.2500.00 |
| 08 | ஆதார வைத்தியசாலை முழங்காவில் | NP/K/RDHS/DF/2024/1 | ரூபா.60,000.00 | 25.04.2024 | ரூபா.2500.00 |

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
கிளிநொச்சி.
TP- 0212285719, Fax- 0212285931
E mail - rdhskoc@gmail.com, financerdhskoc@gmail.com

(CR 41509) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# குளங்கள் வான்பாய்ந்ததால் கிளிநொச்சி வீதிகள் சேதம்!

## சீரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

**கிளிநொச்சி, ஜன.11**

**அண்மையில் பெய்த பெருமழையையடுத்து கிளிநொச்சியின் முதன்மை வீதிகள் பல குண்டும் குழியுமாகச் சேதமடைந்துள்ளன. இதனால் போக்குவரத்து இடர்நிலை ஏற்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

பெருமழையால் இரணைமடுக் குளம், கல்மடுக்குளம், புதுமுறிப்புக் குளம், பிரமந்தனாறுக்குளம், கனகாம்பிகைக்குளம், அக்கராயன்குளம், வன்னேரிக்குளம் எனப் பல குளங்கள் நிரம்பி வான் பாய்ந்தன. அதனால் இங்குள்ள வீதிகள் பல பெரும் சேதத்துக்குள்ளாகியுள்ள நிலையில் அந்த வீதிகளூடாகப் போக்குவரத்துச் செய்ய முடியாத இடர்நிலை உருவாகியுள்ளது. உரிய அதிகாரிகள் இந்த வீதிகளைச் செப்பனிடுவதற்குஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர். (ச-13)



## வடமராட்சியில் ஒதுங்கிய தெப்பத்தில் புத்தர் சிலை!

யாழ்ப்பாணம், ஜன. 11

வடமராட்சி கிழக்கு, குடாரப்பு கடற்கரையில் புத்தர் சிலைகளைத் தாங்கிய மூங்கில் தெப்பம் ஒன்று கடந்த திங்கட்கிழமை கரையொதுங்கியுள்ளது.

பௌத்த கொடி பறக்கவிடப்பட்ட நிலையில் ட்ராகன்களின் உருவத்துடன் அலங்காரம் செய்யப்பட்ட குடிலைத் தாங்கிய இந்தத் தெப்பம் மூங்கிலால் அமைக்கப்பட்டுள்ளது.

தெப்பத்தின் நடுவில் இரண்டு புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை அண்மைய நாள்களில் வடமராட்சி கிழக்கு கரையோரங்களில் பலவடிவிலான மிதப்பு ரதங்கள் கரையொதுங்கி வருகின்றன.

(ச-66, 100)

## பரிசில் தினம்

கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி உதயநாளும் பரிசுதின நிகழ்வும் வாழ்வகம் அமைப்பின் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் இன்று வியாழக்கிழமை காலை 8.45 மணிக்கு சுன்னாகம் - சபாபதிப்பிள்ளை வீதியிலுள்ள வாழ்வகம் - செல்லா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீட பீடாதிபதி கலாநிதி கந்தசாமி பிரபாகரன், சிறப்பு அதிதிகளாக யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தின் துணைத்தூதர் ஸ்ரீமான் நாகேஸ் நட்ராஜ், வலிகாமம் தெற்கு பிரதேசசபை மற்றும் சுன்னாகம் உபஅலுவலகப் பொறுப்பதிகாரி திருமதி கௌரி விக்கினேஸ்வரன், வடக்கு மாகாணம் இலங்கை வங்கி செயற்பாட்டு முகாமையாளர் குலசேகரம்பிள்ளை சிவஞானசுந்தரம், தெல்லிப்பழை - பிரதேச செயலக தொழிற்றுறைத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கீதாஞ்சலி ஞானேஸ்வரன் ஆகியோரும், கௌரவ அதிதியாக கலாநிதி ஆறு.திருமுருகனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ய)

## ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜன. 11

'சைவநாதம்-11' மலருக்கான ஆக்கங்கள் சைவப்புலவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன. சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர்கள் ஆக்கங்களை, பாடத்திட்டத்துக்கு உள்ளமைவாக ஏ-4 தாளில் நான்கு பக்கங்களுக்கு மேற்படாதவாறு அனுப்பிவைக்கமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக 'சைவப்புலவர் செ.த.குமரன், செயலாளர், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம், இணுவில், யாழ்ப்பாணம்' எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-66)

## நீர்வேலி கந்தசுவாமி ஆலய பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 11

நீர்வேலி கந்தசுவாமி ஆலய பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பொதுச்சபைக் கூட்டத்துக்கு பிரேரணை தெரிவிக்கும் உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும் திகதியிலிருந்து 5 நாள்களுக்கு முன்னர் எழுத்து மூலமாக பிரேரணையைச் செயலாளரிடம் சமர்ப்பிக்கலாம் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ச-66)

## சுதந்திரதினத்துக்கு முன்னதாக அரசியல்கைதிகளை விடுவிக்குக

### குரலற்றவர்களின் குரல் அமைப்பு வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 11

நீண்டகாலங்களாகச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 12 தமிழ் அரசியல் கைதிகளையும், எதிர்வரும் சுதந்திரதினத்துக்கு முன்னதாக விடுதலைசெய்ய வேண்டும் என்று வலியுறுத்தி குரலற்றவர்களின் குரல் அமைப்பால் ஜனாதிபதி ரணிலிடம் மனு கையளிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள இனப்பதற்றத்தைத் தீர்ப்பதற்கான நல்லெண்ண முயற்சியாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை நீங்கள் ஏற்கனவே ஆரம்பித்திருந்தீர்கள்.

ஆனால் அந்த வேலைத்திட்டம் தேக்கமடைந்துள்ளது. தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கும் நடவடிக்கை தொடர்வது நல்லிணக்க முயற்சியாக தமிழ் மக்களுக்கு தங்கள் மீது வலுவான நம்பிக்கையை ஏற்படுத்த உதவும் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-100)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன. 11

சைவ வாழ்வியலில் பெரியபுராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமான வாராந்த பெரியபுராண சொற்பொழிவு தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திர மௌலீஸ்வரர் ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிகாமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறும் இந்த நிகழ்வில் இளஞ்சைவப் புலவர் ச. நவநீதன் 'இறைவன் தொண்டர்களுக்குத் தலைவன் என்று அருளிய நாயனார்' என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார். (ச)

\+ + + + +

யாழ்ப்பாணம், ஜன. 11

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.

சொற்பொழிவை இளஞ்சைவப் புலவர் க. கைலநாதன் 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்னும் விடயப்பொருளில் ஆற்றவுள்ளார்.

சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச)

## கொக்காவில் பகுதியில் கழிவுகள் கொட்டத் தடை

முல்லைத்தீவு. கொக்காவில் பகுதியில் கழிவுகளைக் கொட்டுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்று புதுக்குடியிருப்புப் பிரதேச சபை அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு - கொக்காவில் பகுதியில் விஷமிகள் பலர் கழிவுகளை வீசிச் செல்வதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகிறது.

இந்தச் சுகாதாரப் பெருநெருக்கடிகளில் இருந்து சிறுவர்கள், முதியவர்களைப் பாதுகாக்குமாறும் அந்தப் பகுதி மக்கள் விடுத்த கோரிக்கைக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கழிவுகளைக் கொட்டுவோர் கண்டறியப்பட்டு உடன் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர் என்றும் புதுக்குடியிருப்புப் பிரதேசசபை அறிவுறுத்தியுள்ளது. (ச-13)

14 ஆண்டுகளாக

## பேருந்துச் சேவையின்றி அல்லலுறும் துணுக்காய்

முல்லைத்தீவு, ஜன. 11

துணுக்காயின் பல கிராமங்களுக்கு சுமார் 14 ஆண்டுகளாக பேருந்துச் சேவைகள் இடம்பெறாமையால் அங்குள்ள மக்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

அமைதிபுரம், ஆரோக்கியபுரம், அம்பலப் பெருமாள்குளம், கோட்டைக்கட்டியகுளம், தென்னியங்குளம், புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி, ஐயன்கன்குளம், தேராங்கண்டல் உட்பட துணுக்காயின் பல கிராமங்களுக்குப் பேருந்துச் சேவை இடம்பெறுவதில்லை.

இதனால் துணுக்காய் பிரதேச செயலகம், துணுக்காய் மருத்துவமனை, மல்லாவி மருத்துவமனை, துணுக்காய் கமநல சேவை நிலையம், மல்லாவி மத்திய கல்லூரி ஆகியவற்றுக்குச் செல்வதற்குப் போக்குவரத்து சிக்கல்களைச் சந்திக்க நேரிடுகிறது.

உரிய அதிகாரிகள் போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்க்க பேருந்துச் சேவையை நடத்தவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
20.10.1959

மறைவு
09.01.2024

## Lion காளிக்குட்டி முத்துக்குமார்

**(Saje Motors / Saje Agri, கிளிநொச்சி-உரிமையாளர்.)**

மட்டக்களப்பை பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட Lion காளிக்குட்டி முத்துக்குமார் (Saje Motors / Saje Agri - உரிமையாளர்) அவர்கள் கடந்த (09.01.2024) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற காளிக்குட்டி மற்றும் அழகம்மா தம்பதியரின் அன்பு மகனும், மரியதாசன்- இரத்தினாவதி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெனீவியின் அன்புக் கணவரும், பிரவீனா, பிரியந்தி, சஜீசன் ஆகியோரின் பாசமிகு தகப்பனும், கோகுலன், பிரதீபன், சுவேதா ஆகியோரின் அன்பு மாமனாரும், அஸ்வதா, அக்‌ஷதா, நிர்மயி, பிரணீஷ், ஹரீஷ் ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்ற லீலாவதி, காலஞ்சென்ற வல்லிபுரம், சந்திரசோதி, ஜெகசோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுதர்சன், சுதாகரன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், ரமேஷ், சுரேஷ், கமலேஷ், அகிலன், அமலேஸ், கோகிலா, முகுந்தன், வனிதா, வல்லிபுரம், பத்மநாதன், கவிதா, குமுதா, அமுதா, தமிழ்வாணன், சுகிர்தா, சதீஸ், கலைமதி ஆகியோரின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2024) வியாழக்கிழமை பலாலி வீதி, திருநெல்வேலியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் மதியம் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**076 6004 820**
**0777 911 442**

**119/10, பலாலி வீதி,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

(CS 27625) A-1


## தரம் - 05 மாணவர்களின் பெற்றோர்களுக்கு ஓர் நற்செய்தி!

*தேசிய ரீதியான தபால் மூலமான திருத்தற் சேவையுடன் கூடிய படிமுறை ரீதியான*

**மாதிரி பரீட்சைத் தொடர்**

ஆரம்பம் :- 2024 ஜனவரி 20

வீட்டில் இருந்தவாறே உங்கள் மேற்பார்வையில்
இரகசியமாக உங்கள் பிள்ளைகளின்
உண்மையான அடைவு மட்டத்தை
அறிய - ஊக்குவிக்க
ஐவின்ஸ் தமிழ் வழங்கும்
ஓர் தனித்துவமான அரிய வாய்ப்பு

பூரண விபரத்தை அறிய
0767461066
என்ற வட்சப் இலக்கத்திற்கு
Miss Call கொடுங்கள்



ஏற்பாடு
www.ivinstamil.com
Tamil
WE REPORT TO YOU.

பொருளாதார வசதி குறைந்த
மாணவர்களுக்கு இலவசம்


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில்
27.12.1960

விண்ணில்
12.12.2023

அமரர்
**கனகரத்தினம் அருள்நாதன்**


அன்புக்கோர் இலக்கணமாகி
அனைவரையும் அன்பால் இணைத்து..
இன்றுவரை எம்முடன் வாழ்ந்தவரே!
என்று காண்போம் இனி உங்களை
அம்மாளின் பாதங்களில் அடைக்கலமாகி
அமைதியுடன் உறங்கிடுங்கள்.

அன்னாரின் திடீர் மரணச்செய்தி அறிந்து உடன் வந்து உதவி புரிந்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றிகள். இன்று (11.01.2024) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது நாரந்தனை இல்லத்தில் நடைபெறும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**நாரந்தனை வடக்கு,**
**ஊர்காவற்றுறை.**

**மனைவி, பிள்ளைகள்,**
**குடும்பத்தினர்.**

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
01.12.1945

மறைவு
13.01.2021

அமரர்
**சின்னத்துரை குமரவேல் (JP)**

(ஓய்வுபெற்ற நூலகர், பொது நூலகம், சுன்னாகம்,
முன்னாள் தலைவர் - பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், சுன்னாகம்,
விவாகப் பதிவாளர் - வலிகாமம் வடக்குப் பிரிவு)

**(திதி:அமாவாசை (11.01.2024)**

*ஈடில்லாப் பொதுத் தொண்டாற்றி*
*கூட்டுறவை நாட்டுயர்வாக்கி*
*குவலயம் போற்ற வாழ்ந்து*
*ஏணிப் படியாய் இருந்து*
*எமை உயர்த்தி விட்டுவிட்டு*
*ஏகாந்தமாய் தவிக்கவிட்டு ஏகி*
*ஆண்டுகள் மூன்று ஆனதுவே*
*எமது ஆருயிர் அப்பாவே!*

என்றும் உங்கள் நினைவில்...

**"திருவேரகம்"**
**முத்துக்கிருஷ்ணர் வீதி,**
**சுன்னாகம்.**

**குடும்பத்தினர்.**

(CS 27621) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையும் கல்வி அமைச்சும் இணைந்து செயற்படுத்தும் 'மாணவத் தூதுவர் நிகழ்ச்சித் திட்டம்' கடந்த வாரம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மேலதிக மாவட்டச் செயலர் சி. குணபாலன் தலைமையில் நடைபெற்றது. மாணவர்களிடையே எவ்வாறு தலைமைத்துவப் பண்பை மேம்படுத்துவது மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பிலான மாணவர்களுக்கான விழிப்புணர்வுகள் பற்றிய கருத்துகளும் வளவாளர்களால் மாணவர்களிடையே பகிரப்பட்டன. (ச-75)



காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் பழைய மாணவரான கெங்காதரன்ஜனகன் இலங்கை முழுவதற்குமான சமாதான நீதிவானாக மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி டி. ஆர். சூசைதாஸ் முன்னிலையில் கடந்த நவம்பர் மாதம் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (ரி)



தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் ஒளிவிழா நிகழ்வு பிரதேச செயலக அலுவலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ரி-66)



தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் பொருளாதார நலிவுற்ற 80 குடும்பங்களுக்கு பொங்கல் பானை மற்றும் பொங்கல் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன. கோண்டாவில் ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து அவற்றை வழங்கின.

பொங்கல் பொதிகையளிக்கும் நிகழ்வு சனசமூக நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் து. சுதன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ச-66)



2000 ஆம் ஆண்டு கொழும்பில் வைத்து படுகொலை செய்யப்பட்ட குமார் பொன்னம்பலத்தின் 24 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணம், கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. (ரி-27)



வலிகாமம் வடக்கு, தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் ஒளிவிழா பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ரி-9)


**தென்னம்பிள்ளை விற்பனைக்கு**

எம்மிடம் நல்லின தென்னம் நாற்றுக்களும் குறைந்த காலத்தில் பயன்தரக் கூடிய நாற்றுக்களும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: **077 659 2044**

**பராமரிப்பாளர் தேவை**

யாழில் இயங்கும் முதியோர் / நோயாளர் பராமரிப்பு நிலையத்திற்கு பராமரிப்பாளர் தேவை. வயது : 19-50

சம்பளம் நேரில்.


தொடர்புகளுக்கு: **0777 126859/60**


# மலையக தியாகிகள் நேற்றுக் கடைப்பிடிப்பு

யாழ்., ஜன. 11

யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தால் மலையக தியாகிகள் தினம் உணர்வு பூர்வமாக நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. மலையக மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக குரல் கொடுத்து இறந்தவர்களை மையப்படுத்தி மலையக தியாகிகள் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. யாழ். பல்கலைக் கழகத்திலுள்ள பொதுத்தூபியில் மாணவர்கள் மலரஞ்சலி செலுத்தி நினைவேந்தலை கடைப்பிடித்தனர். (ஓ-125)


**கண்ணீர் அஞ்சலி**



தும்பளை, பருத்தித்துறையினைப் பிறப்பிடமாகக் கொண்ட

**சின்னத்தம்பி இராதாகிருஷ்ணன்**

அவர்கள் கடந்த (02.01.2024) அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**துயர் பகிர்வில்...**

**தும்பளை கிழக்கு, சனசமூக நிலையம்,**

**நெல்லண்டை வீதி,**

**தும்பளை பருத்தித்துறை.**

(CR 41513) A-1

**கேள்வி அறிவித்தல்**

**யாழ் ஒளி மின் நிலையம்,**

**இலங்கை மின்சார சபை, சுன்னாகம்.**

**சேவைகளுக்கான கேள்வி கோரல்**

இலங்கை மின்சாரசபை யாழ் ஒளி மின் உற்பத்தி நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்களின் போக்குவரத்துக்காக (சுன்னாகத்தில் இருந்து கொழும்பு கொழும்பு இருந்து சுன்னாகம்) ஆகக் குறைந்த 26 ஆசனங்களைக் கொண்ட பயணிகள் பேரூந்து (Bus) ஒன்று ஒரு வருட (One year) வாடகை அடிப்படையில் தேவைப்படுகின்றது. சம்பந்தமான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப்பத்திரங்களை அலுவலக நேரத்தில் பி.ப 3.00 மணிவரை பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதான பொறியியலாளர்,**
**யாழ் ஒளி மின்நிலையம்,**
**இலங்கை மின்சார சபை,**
**சுன்னாகம்.**
தொ.பே.இல. **021 224 2247/8**

**Office of the Deputy General Manager,**
**Ceylon Electricity Board,**
**Generation Head Quarters,**
**New Kelani Bridge Road,**
**Kolonnawa.**
**Telephone No.0112 423 897**

கேள்விப்பத்திர பெறுமதி. - ரூபா. 2,000.00
கேள்விப்பத்திர பிணை வைப்பு. - ரூபா.55,000.00
பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களை

Office of the Deputy General Manager,
Ceylon Electricity Board,
Generation Head Quarters,
New Kelani Bridge Road,
Kolonnawa.
Telephone No. 0112423897

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.
கேள்விப்பத்திரங்கள் 07/02/2024
பி.ப 2.00 மணிக்கு Office of the Deputy General Manager, Ceylon Electricity Board, Generation Head Quarters, New Kelani Bridge Road, Kolonnawa. என்னும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் திறக்கப்படும்.

(CR 41510) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உழவியந்திரத்திலிருந்து வீழ்ந்த இளைஞன் சாவு!

சாவகச்சேரி, ஜன.11

உழவு இயந்திரத்தில் இருந்து தவறி வீழ்ந்த 23 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமாலை அனலைதீவில் நடந்துள்ளது.

தர்சன் (வயது-23) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். இவர் பயணித்த உழவு இயந்திரம் கற்குவியல் ஒன்றின்மீது ஏறியபோது தவறி வீழ்ந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் காயமடைந்த இளைஞனை ஊர்காவற்றுறைக்குக் கொண்டுவருவதற்கான அம்புலன்ஸ் படகுச்சேவை கிடைக்காததால், இருமணி நேரத்தின் பின்னர் கடற்படையினரின் படகு மூலம் ஊர்காவற்றுறை இறங்குதுறைக்குக் கொண்டுவரப்பட்டார் என்றும், ஆயினும் இளைஞன் வழியிலேயே உயிரிழந்தார் எனவும் கூறப்படுகின்றது. (எ-9)

## கஞ்சா...

வத்தினரும் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர், சான்றுப்பொருடன் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ-எ-100)

## தேர்தலா?...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கு முன்னதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவு செய்யப்படவுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்காக நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன் ஆகியோரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான சீ.யோகேஸ்வரனும் விண்ணப்பித்துள்ளனர். கடந்த காலங்களில் கட்சியின் தலைவர் தெரிவு போட்டியின்றி இணக்கப்பாட்டின் அடிப்படையில் இடம்பெற்றிருந்தநிலையில், இம்முறை தலைவர் தெரிவு வாக்கெடுப்புக்குச் செல்லும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்தப் பின்னணியில் தமிழரசுக்கட்சியின் விசேட அரசியல் குழுக் கூட்டம் நேற்று திருகோணமலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இல்லத்தில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கட்சியின் தலைவர் தெரிவு தொடர்பாகச் சுமார் 3 மணி நேரம் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன.

கூட்டத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் போட்டியின்றிய தலைவர் தெரிவு தொடர்பாக வலியுறுத்தினர்.

ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, கட்சியின் தலைவர்களாகக் கடந்த காலங்களில் பதவி வகித்தோரின் பட்டியலை சகலருக்கும் வழங்கிவிட்டு கருத்துரைக்கும் போது, கடந்தகாலங்களில் தலைவர் பதவிக்குப் போட்டியின்றிய தெரிவே காணப்பட்டது. ஒவ்வொரு காலகட்டத்திலும் பலர் தலைவர் பதவி வகித்தனர். இப்போதும் வாக்கெடுப்பின்றி இணக்கப்பாட்டின் அடிப்படையில் போட்டியின்றி தலைவர் தெரிவு செய்யப்படுவது கட்சி ஒற்றுமையைப் பாதுகாக்கும் என்று குறிப்பிட்டார்

கூட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், இந்தத் தலைவர் போட்டியால் கட்சியின் ஆதரவாளர்களிடையே குழப்பம் ஏற்பட்டுள்ளது. கட்சிக்குள் பிளவுகள் தோன்றுகின்றன. ஆதரவாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாதுள்ளது என்று குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாகப் பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டன. இறுதியில் தலைவர் பதவிக்குப் போட்டியிடுபவர்கள் தங்களுக்குள் கலந்துபேசித் தீர்மானம் ஒன்றை எடுக்க ஒரு நாள் அவகாசம் வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது.

அவர்கள் தீர்மானத்தை (இன்று) கட்சியின் பொதுச் செயலாளர் மற்றும் தலைவருக்குத் தெரியப்படுத்துவார்கள் என்றும். அவர்கள் இணக்கப்பாட்டுக்கு வராதபட்சத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி திட்டமிட்டபடி தேர்தல் நடைபெறும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-எ-26)

## அரசின்...

நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கில் அன்று மோதல் உருவாகக் காரணம் என்ன? 1956 மற்றும் 70 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் எடுக்கப்பட்ட தவறான முடிவுகளே அதற்கு வழிவிட்டது. இன அடிப்படையில் வேலை வாய்ப்பு, கோட்டாமுறை என்பவற்றுக்கு எதிராகவே குரல் எழுப்பப்பட்டது. ஆக அவர்களை ஆயுதம் ஏந்த வேண்டிய நிலைக்குத் தள்ளியது யார்?

அரசின் தவறான கொள்கைகளே பிரதான காரணம். தவறுகளை வைத்துக் கொண்டு பயங்கரவாத முத்திரை குத்துவதில் பயன் இல்லை. உலக நாடுகளில் பயங்கரவாதத் தடைச்சட்டம் உள்ளது. ஆனால், அரசியல் எதிர்ப்பாளர்களை ஒடுக்கப் பயன்படுத்தப்படுவதில்லை. ஊடகவியலாளர்கள், கலைஞர்களை ஒடுக்க பயன்படுத்தப்படுவதில்லை. கடந்த வருடமே இந்தச் சட்டவரைவு கொண்டு வரப்படவிருந்தது. எனினும், மனித உரிமைக் கூட்டத்தொடரால் அது மீளப்பெறப்பட்டது. தற்போது மீளக் கொண்டுவரப்பட்டுள்ளது - என்றார். (அ-எ-44)

## 3400...

உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தொல்லியல் மையம் வேலணைத் தீவின் சுற்றுலாத்தலமான கடற்கரையில் இருந்து ஒரு கிலோமீற்றர் தெற்காக உள்ளது. அகழ்வாய்வில் வேட்டையாடி உணவாக உட்கொள்ளப்பட்ட விலங்குகளின் எலும்பு எச்சங்கள், வேட்டையாடும் கருவிகள், இறந்த உடல்கள் புதைக்கப்பட்டமைக்கான சான்றுகளுடன் வேறு தொல்பொருள்களும் காணப்படுகின்றன. இவ்வாறான தொல்பொருள்கள் கடந்தகாலங்களில் இலங்கையின் தெற்குக் கடற்கரையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வரலாற்று முற்பட்ட காலத்துக்குரிய மிக அண்மித்த சான்று மாந்தையில் கி.மு. ஆயிரத்து 600க்கு முற்பட்டவையாகக் கண்டுபிடிக்கப்பட்டன. தற்போது சாட்டியில் கிடைத்துள்ள சான்றுகளின் காலப்பகுப்பாய்வு இலங்கையின் வரலாற்றுக்கு முந்திய காலகடத்தை இன்னும் 200 ஆண்டுகள் முன்நோக்கி நகர்த்தியுள்ளது. இந்த ஆய்வை தனது கலாநிதி பட்டப்படிப்புக்காக முன்னெடுத்த நெதர்லாந்து நாட்டு தொல்லியலாளரான ஜனினா நோனிஸ் என்பவர் கால்க்கணிப்பு ஆய்வுகளையும் மேற்கொண்டுள்ளார். (அ-எ-125)

## வாள்வெட்டில்...

பருத்தித்துறை - கட்டைக்காடு வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் சாரதி, மறுநாள் பஸ் சேவைக்காக பருத்தித்துறை நகர் பகுதியில் பஸ்ஸை நிறுத்திவிட்டுத் தூங்கியுள்ளார்.

நள்ளிரவில் முகத்தை மறைத்தவாறு வந்த நால்வர் பஸ் கண்ணாடியை உடைத்ததுடன், சாரதியை வாளாலும் வெட்டியுள்ளனர். தப்பியோடிய சாரதியை அவர்கள் துரத்தித் துரத்தி வாளால் வெட்டியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் படுகாயமடைந்த சாரதி பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-100)

## விரைவில்...

சி.சிறீதரன் ஆகியோர் தெரிவித்தனர். அதேவேளை, கட்சியின் உள்ளகத் தகவல்களின் அடிப்படையில் வாக்கெடுப்பின் மூலமே கட்சித் தலைவர் தெரிவு இடம்பெற வாய்ப்புள்ளது என்று அறிய முடிகின்றது.

தமிழரசுக்கட்சியின் விசேட அரசியல் குழுக் கூட்டம் நேற்று திருகோணமலையில் நடைபெற்றிருந்த நிலையில், வாக்கெடுப்பின்றி இணக்கப்பாட்டின் அடிப்படையில் கட்சித் தலைவரைத் தெரிவு செய்வது தொடர்பாகப் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. தலைவர் பதவிக்குப் போட்டியிடுபவர்களுக்கு அதற்காக ஒருநாள் அவகாசமும் வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பாகக் கேட்டபோதே நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

"கலந்துபேசி இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. நாம் எடுக்கும் தீர்மானத்தை கட்சித் தலைவருக்கும், பொதுச் செயலாளருக்கும் தெரியப்படுத்துவோம். இணக்கப்பாட்டுக்கு வரமுடியாத பட்சத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி கட்சித் தலைவர் தெரிவுக்கான வாக்கெடுப்பு நடத்தப்படும். எதிர்வரும் 28ஆம் திகதி திட்டமிட்டபடி கட்சியின் தேசிய மாநாடு நடைபெறும்" என்று நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரனும், சிறீதரனும் சொல்லிவைத்தாற்போல 'ஒரேமாதிரியாக' தெரிவித்தனர்.

மற்றொரு போட்டியாளரான நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சீ. யோகேஸ்வரனைத் தொடர்புகொள்ள முடியவில்லை. (அ-எ-26)

## வர்த்தக...

தீ விபத்துக்கு உள்ளாகியுள்ளது. நேற்று அதிகாலை வர்த்தக நிலையத்தில் தீ பரவியுள்ளதை அவதானித்த மக்கள் தீயைக் கட்டுப்படுத்த முயன்றனர். ஆயினும் வர்த்தக நிலையம் தீயால் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. அருகில் இருந்த வர்த்தக நிலையங்களில் தீ பரவாது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

வர்த்தக நிலைய உரிமையாளரின் மகன் இறுதிப்போரில் காணாமல் போயுள்ளார். அவரின் மனைவி முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் செயலாளராக உள்ளார். இந்தத் தம்பதி தங்கள் மகனைத் தேடிப் போராடி வருகின்றனர். தற்போது வர்த்தக நிலைய உரிமையாளர் ஐயப்பன் விரதத்துக்காக இந்தியா சென்றுள்ளார். (அ-19-13)

## தமிழாராய்ச்சிப்...

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளின் 50ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சொலமன் சிறில் தலைமையில் நினைவேந்தல் நடைபெற்றது. உயிர் நீத்தவர்களுக்கு அகவணக்கம் செலுத்தி, பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. அதேவேளை, நேற்று மாலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் முற்றவெளியில் உள்ள நினைவுத் தூபியில் நினைவேந்தலை நடத்தினர். (அ-ஒ-125-66-17)

## சம்பந்தன்...

தெரிவில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது என்று இரா.சம்பந்தன் தரப்பினரால் அதிருப்தி வெளியிடப்பட்டிருந்தது.

தனது ஆதரவாளர்களும், கட்சியில் நீண்டகாலமாகச் செயற்பட்டவர்களும் இந்தத் தெரிவில் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்து, கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜாவுக்கு இரா.சம்பந்தன் கடிதம் ஒன்றையும் அனுப்பியிருந்தார். அதன்பின்னர் இந்த விடயம் சர்ச்சையாக மாறியிருந்தது.

நேற்று நடந்த அரசியல்குழுக் கூட்டத்தில் இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது. இரா. சம்பந்தன் தரப்பால் பரிந்துரைக்கப்படும் 6 பேரை கிளை அங்கத்தவர்களாக உள்வாங்குவது என்று முடிவு எடுக்கப்பட்டு, அந்தச் சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹமாஸின் கட்டமைப்பு முழுமையாக அழிப்பு!

## இஸ்ரேல் இராணுவம் தகவல்

**டெல்அவிவ், ஜன. 11**

**வடக்கு காஸாவில் ஹமாஸின் கட்டமைப்புகள் அழிக்கப்பட்டுவிட்டன என்று இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.**

இஸ்ரேல் மீது ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து, காஸாவில் இஸ்ரேல் பதிலடி கொடுத்து வருகின்றது. காஸாவை வடக்கு காஸா, மத்திய காஸா, தெற்குக் காஸா என மூன்றாகப் பிரித்து தன் இராணுவ நடவடிக்கையை இஸ்ரேல் மேற்கொண்டு வருகின்றது. இந்த நிலையிலேயே வடக்குக் காஸாவில் இராணுவ நடவடிக்கை கிட்டத்தட்ட முடிவுக்கு வருகின்றது என்றும், அங்குள்ள ஹமாஸின் இராணுவக் கட்டமைப்புகள் அழிக்கப்பட்டு விட்டன என்றும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.


வடக்குப் பகுதியில் ஹமாஸின் இராணுவக் கட்டமைப்பை அழிக்கும் பணியை முடித்து விட்டோம். தற்போது மத்திய மற்றும் தெற்கு காஸாவில் ஹமாஸ் அமைப்பை அழிப்பதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதற்குச் சில காலம் எடுக்கும். ஏனெனில் ஹமாஸ் அமைப்பினர் தளபதிகள் இல்லாமல் செயற்பட்டு வருகிறார்கள். மத்திய காஸாப் பகுதியில் உள்ள அகதிகள் முகாம்களில் ஹமாஸ் அமைப்பினர் பதுங்கி உள்ளனர். தெற்கு காஸாவில் கான்யூனுஸ் நகரில் பெரிய நகர்ப்புற நிலப் பரப்பில் சுரங்கப்பாதைகள் உள்ளன என்று இஸ்ரேல் இராணுவத்தின் செய்தித் தொடர்பாளர் டானியல் ஹகாரி தெரிவித்துள்ளார். (ம)


### அறைகள் வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் மருத்துவக்கல்லூரிக்கு அருகாமையில் 10 நிமிட நடைதூரத்தில் அமைந்துள்ளது. மேல் மாடியில் மருத்துவக்கல்லூரி மாணவிகள் தங்கியுள்ளனர். கீழ் மாடிக்கு மருத்துவக்கல்லூரி தமிழ் மாணவிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு: 076 794 4001


## மரண அறிவித்தல்



### இளையதம்பி சுப்பிரமணியம்

யாழ். ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், கனடா Ottawa, ஆவரங்கால் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சுப்பிரமணியம் கடந்த (06.01.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், சுப்பிரமணியம் அன்னலக்ஷ்மி தம்பதியரின் அன்பு மருமகனும், இரத்தினேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், கனடாவைச் சேர்ந்த ஶ்ரீதரன் (ஶ்ரீ), சிவாஜினி (சிவா), ஶ்ரீரஜனி (ரஜனி), ஶ்ரீவதனி (மஞ்சு), இராஜதர்சினி (ராசாத்தி), இராஜகுமார் (குமார்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலாநிதி, விக்கினேஸ்வரராஜா, வரதன், பிரசாந்தி, காலஞ்சென்ற சுரேந்திரன் (சுரேஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பொன்னம்பலம், கமலாதேவி, கண்மணி, செல்வலக்ஷ்மி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராசையா, வசந்தன், பகரதி, நடராஜா, ரேவதி, ஆருஷ், ராகனி, சானுமரதன், காலஞ்சென்றவர்களான யோகராணி, இரத்தினசிங்கம், சாந்தி, பூமணி, தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், தர்சிகா, கௌசிகா, பிரித்திகா, ஆர்திகா, பாரதிகா, அனுஜன், ஜனனி, வினோஜினி, மயூரன், கேசவன், பிரியங்கா, நிவேதா, ஈழினி, ஈழனா, சமர்வேந்தன், ஈழன், ஆரியா, சூரியா, விஷ்னு, அர்வின், அர்ஜுன், அஞ்ஜனா ஆகியோரின் பாசமிகு பேரனும், இனியா அவர்களின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (11.01.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் ஆவரங்காலில் அமைந்துள்ள அன்னாது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் வாதரவத்தை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**புத்தூர் கிழக்கு,**
**விஷ்ணு வீதி, ஆவரங்கால்.**

(cs 53449) (N-1)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# யாழ். வருகின்றார் பிரிட்டன் இளவரசி

**யாழ்ப்பாணம், ஜன. 11**

பிரித்தானியாவின் இளவரசி இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், தனது பயணத்தின் ஒரு பகுதியாக அவர் யாழ்ப்பாணத்துக்கும் வரவுள்ளார். பிரிட்டன் அரசாங்கத்தால் மீளமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் பொதுநூலகத்தை அவர் இன்று பார்வையிடுவதுடன், பிரிட்டன் நூலக காட்சிப்படுத்தல் பிரிவையும் திறந்து வைக்கவுள்ளார். (ம-27)



## வேலைவாய்ப்பு

1. Graphic Designer
(கிராப்பிக் டிசைனர்)
**ஆண் / பெண் இருபாலாரும்**

**பழக விரும்புவர்களும் விண்ணப்பிக்கலாம்**

மேற்குறிப்பிட்ட பதவிக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் (13.01.2024) சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் பி.ப 12.00 மணிவரை தங்கள் சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகம்தரவும்.




உதயன்
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு எதிராக 3 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.**

- யாழ்ப்பாணம் பலாலி வீதி பரமேஸ்வரா சந்திக்கு அருகாமையில்
- இராமநாதன் வீதி முகப்புடன்
- 1 பரப்பு, 1 பரப்பு, 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- தரகர் தேவையில்லை
- பார்வையிடும் நேரம் காலை 8.00 முதல் மாலை 6.00 வரை

தொடர்பு: 071 173 3911, 076 853 5022


## மோசடியில் அகப்படாதீர்கள்

யாழ்ப்பாணம், கல்வியங்காடு, டச்சுவீதி, GPS Lane அருகாமையில் 6 பரப்புக் காணி இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குள்ளது என பத்திரிக்கைகளில் கடந்த சில நாட்களாக வந்த விளம்பரம் மோசடியாக செய்யப்பட்ட விளம்பரமாகும். குறித்த ஆதனம் தொடர்பில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மீளாய்வு/128/23 எனும் வழக்கும் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் காணி/1320/2024 எனும் வழக்கு நிலுவையில் உள்ளன. இக்காணியை விற்க முயல்வோருக்கு குறித்த காணியில் எவ்வித உரித்தும் இல்லை என்பதனை உரிமையாளர்கள் அறியத்தருகின்றனர்.

குறித்த மோசடி விற்பனையில் பங்குபற்றி காணி கொள்வனவு செய்வோருக்கெதிராகத் தலா 1 கோடி நட்டம் கோரி காணி உரிமையாளர்களால் வழக்கு தாக்கல் செய்யப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு: 075 325 4124**
**074 136 4103**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.01. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.